பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 02 வியாழக்கிழமை 18.08.2022 கதிர் 174


## கெஹலியவின் வீட்டுக்கு தீ வைத்த மூவர் சிக்கினர்

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் தனிப்பட்ட வீட்டுக்குத் தீயிட்டு சேதம் விளைவித்த சந்தேகத்தில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி காலிமுகத்திடல் சம்பவங்களை அடுத்து நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையின்போதே மேற்படி தீ வைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

கண்டிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் கண்டிப் ☞2


# பிளவடைகின்றது சஜித் அணி; ரணில் பக்கம் தாவப் பலர் தயார்

## தமிழ், முஸ்லிம் எம்.பிக்களும் உள்ளடக்கம்

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணியிலிருந்து 20 இற்கும் மேற்பட்டோர் அரசுடன் இணைய இதுவரை இணக்கம் தெரிவித்துள்ளனர். அவர்களுள் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குகின்றனர்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். ☞2





## செல்வச்சந்நிதி மகோற்சவம் 27இல் ஆரம்பம்

வரலாற்றுப் புகழ்பெற்ற யாழ். வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

செப்டெம்பர் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு பூங்காவனமும், செப்டெம்பர் 6ஆம் திகதி கைலாச வாகனமும், செப்டெம்பர் ☞2

### யாழில் தகாத உறவு:


## 5 ஆண்களுக்கும் 2 சிறுமிகளுக்கும் விளக்கமறியல்

17 வயது சிறுமிகள் இருவரைக் கடத்திச் சென்றமை மற்றும் தகாத உறவு கொண்டமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் பஸ் சாரதிகள் இருவர், நடத்துநர்கள் இருவர் உட்பட ஐவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன், வீட்டைவிட்டு வெளியேறி துர்நடத்தையில் ஈடுபட்ட சிறுமிகள் இருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் கட்டளையிட்டது. ☞2

## மேர்வின் சில்வா கைது!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மேர்வின் சில்வா, சி.ஐ.டியினரால் இன்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

2007 ஆம் ஆண்டில், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டு தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வந்த ☞2



## புதிய அரசியல் கூட்டணி; தலைவராக விமல் எம்.பி.



நாடாளுமன்றத்தில் சுயாதீனக் கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கிய புதிய கூட்டணியின் தலைவராக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இதனை ஊடகங்களிடம் தெரிவித்தார். ☞2

# கோட்டாபயவைப் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பு



### வாசுதேவ கூறுகின்றார்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்ப வேண்டும். அவர் நிம்மதியாக வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது எம் அனைவரினதும் பொறுப்பாகும்.

– இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடு திரும்பும் கோட்டா, மீண்டும் அரசியலில் ☞2

## இலங்கையைவிட நான் பணக்காரன்

### ஜனாதிபதி ரணில் அதிரடி



நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு மோசமாக உள்ளது என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. நான் நிதி அமைச்சராகப் பதவியேற்றதும் அந்நியச் செலாவணியில் இலங்கை என்ற ஒரு நாட்டை விடவும் நான் பணக்காரன் என்பதை உணர்ந்துகொண்டேன். என் வீட்டில் ஆயிரம் டொலர் சேமிப்பில் உள்ளது. அதன்படி, நான் நாட்டை விட ஆயிரம் மடங்கு பணக்காரன். அதுதான் யதார்த்தம்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ☞2

### ரெட்டாவின் வங்கிக்கணக்கில்

## 50 இலட்சம் ரூபாவை வைப்பிலிட்ட நபரை அடையாளம் கண்டது சி.ஐ.டி.

காலிமுகத்திடல் போராட்டத்தின் ஆரம்பம் முதல் முன்னணிச் செயற்பாட்டாளராகச் செயற்பட்ட 'ரெட்டா' என அழைக்கப்படும் ரதிந்து சேனாரத்னவின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் 50 இலட்சம் ரூபாவை வைப்பிலிட்ட நபரைக் ☞2



## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் மாட்டினர்

மஸ்கெலியா, சாமிமலை – ஸ்டொக்ஹோம் தோட்டப் பகுதியில் உள்ள சாமிமலை ஓயாவில், சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் குற்றத்தடுப்பு ☞2

## தடை நீக்கம் குறித்து ஜனாதிபதி விளக்கம்

முறையான – ஆழமான தகவல் ஆய்வு மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் 316 தனிநபர்களையும், 6 நிறுவனங்களையும் தடைப்பட்டியலில் இருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் புதிதாக அடையாளங்காணப்பட்ட 55 நபர்கள் மற்றும் 3 அமைப்புகள் உள்ளிட்ட 316 நபர்கள் மற்றும் 15 அமைப்புகள் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி ஊடாக தடைசெய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டுமுள்ளன.

– இவ்வாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடை நீக்கம் தொடர்பில் பல்வேறு ☞2

# ரணிலுடன் பஸில் நேரில் பேச்சு

## 'மொட்டு'வின் முக்கியஸ்தர்களும் பங்கேற்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான பேச்சு இன்று நடைபெறவுள்ளது. இதில் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கும் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெறும் ☞2

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு


## இலங்கையைவிட ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்போது நாம் பொருளாதார உறுதிப்பாட்டை உருவாக்க வேண்டும். நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வருகின்றோம். பணிக்குழாம் இணக்கப்பாட்டுக்கு இறுதி நிபந்தனைகளைத் தயாரிப்பதற்கு இப்போது இரண்டு குழுக்கள் உள்ளன.

கடன் பொதியொன்றை வழங்கத் திட்டமிட்டு சீனக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூடுதல் நிதி உதவி வழங்கவும் தயாராகியுள்ளது. இந்த இலக்குகளை எவ்வாறு அடைவது என்பது குறித்து நாம் ஜப்பானுடன் கலந்துரையாடினோம். நாங்கள் ஏற்கனவே இந்தியாவுடன் பேச்சு ஆரம்பித்துள்ளோம்.

நாம் விரைவாக செயற்பட்டால், இந்த நெருக்கடி குறுகிய காலமே நீடிக்கும். ஆனால் நாம் தொடர்ந்து விவாதித்துக் கொண்டிருந்தால், அனைவரும் துன்பப்படவேண்டி ஏற்படும். நாம் மீண்டும் பழைய அரசியலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது பழைய முறையை கொண்டு வருவதற்காகவா? என்பதுதான் கேள்வி.

முதலில் 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவேன். அதன் பின்னர் நாடாளுமன்றத்தை அரசாக மாற்ற நாம் முயற்சிப்போம். துறைசார் மேற்பார்வைக் குழு, தேசிய சபை, மேற்பார்வை நிறைவேற்றுக் குழு ஆகியவற்றில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் பங்கேற்க முடியாது.

குழுக்களுக்கு ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை அழைக்கலாம். குழுத் தலைவரின் அனுமதியுடன் அவர்கள் கட்சிகளிடம் கேள்வி எழுப்பலாம். உலகில் வேறு எந்த நாட்டிலும் இளைஞர்களுக்கு துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் பங்கேற்க வாய்ப்பை வழங்கியதில்லை. இந்த நாடாளுமன்றத்தின் ஊடாக புதிய முறையை நோக்கி நாம் பயணிக்க முடியும். அதை வேறொரு குழுவிடம் ஒப்படைக்க முடியாது. இதனால் புதிய அரசமைப்பை நோக்கிச் செல்ல முடியும். இனங்களுக்கிடையில் உள்ள பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததால் மீண்டும் நாம் போரில் ஈடுபட வேண்டியதில்லை.

நான்காவது தொழில் புரட்சிக்கு நாம் இப்போது தயாராக வேண்டும். பணம் சம்பாதிப்பதற்கான வழிகளைக் கண்டறிய அதைப் பயன்படுத்தலாம். ஆனால், நமது பொருளாதாரம் முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும். அரச துறை வீழ்ச்சியடையும் போது, கல்வி, சுகாதாரம், வீடு போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நம்மிடம் பணம் இருக்க வேண்டும்.

நமது தேர்தல் முறைகள் குறித்தும் சிந்திக்க வேண்டும். விருப்பு வாக்கு முறையானது வாக்களிப்பு முறைக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நாடாளுமன்றத்தில் புதிய முறையொன்றை கொண்டுவரும் திறன் நமக்கு இருக்க வேண்டும் - என்றார்.

## புதிய அரசியல் கூட்டணி; ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமல் வீரவன்ஸ தலைமையிலான புதிய கூட்டணி எதிர்வரும் 4 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டணியில் 8 சுயாதீனக் கட்சிகள் ஒன்றிணையும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார மேலும் கூறினார்.

## கோட்டாபயவைப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடமாட்டார் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கைக்கு மீண்டும் வருகை தரவுள்ளார் என்று ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவரும் அவரது உறவினருமான உதயங்க வீரதுங்க தெரிவித்திருந்தார்.

வாக்குமூலம் வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று வந்த உதயங்க வீரதுங்க அங்கிருந்து வெளியேறும்போதே இந்தத் தகவலை வெளியிட்டிருந்தார்.

## 5 ஆண்களுக்கும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டதாவது:-

இரண்டு வாரங்களுக்கு முன்னர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமிகள் இருவர் வீட்டிலிருந்து வெளியேறி வந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்துள்ளனர். அவர்கள் தொடர்பில் அறிந்த ஆண் ஒருவர், சிறுமிகள் இருவரையும் அழைத்துச் சென்று சாவகச்சேரியில் உள்ள விடுதியில் தங்கியுள்ளார். எனினும், கடந்த திங்கட்கிழமை அந்த விடுதியிலிருந்து வெளியேறிய மூவரும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு வந்துள்ளனர்.

அன்றைய தினம் இரவு வாகனம் ஒன்றில் பஸ் சாரதிகள் இருவர், நடத்துநர்கள் இருவர் என மேலும் நால்வர் இணைந்து வாகனம் ஒன்றில் எழுதுமட்டுவாழ் பற்றைக் காட்டுக்குள் சிறுமிகளை அழைத்துச் சென்றுள்ளனர். அதன்போது சிறுமி ஒருவர் சாதூரியமாகப் பேசி வாகனத்திலிருந்து இறங்கி எழுதுமட்டுவாழில் மக்கள் வாழும் பகுதிக்கு வந்துள்ளார். வீதியில் சென்றவர்களிடம் நடந்தவற்றைத் தப்பிவந்த சிறுமி தெரிவித்த நிலையில் பொலிஸ் அவசர பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.

சிறுமிகளிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களைக் கடத்திச் சென்றமை மற்றும் தகாத உறவு கொண்டமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் ஐவர் கைது செய்யப்பட்டனர். வீட்டைவிட்டு வெளியேறி வந்து துர்நடத்தையில் ஈடுபட்டமையால் சிறுமிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

## தடை நீக்கம் குறித்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அந்தப் பொறிமுறை தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெளிவுபடுத்தியுள்ளது. அந்த விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தடைநீக்கப் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பான விசாரணைகள் கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.

நாட்டுக்குள் அல்லது நாட்டுக்கு வெளியில் வாழும் அல்லது பயங்கரவாத அல்லது தீவிரவாத அமைப்புகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய நபர்கள், அதற்குரிய நிதி, சொத்துக்கள், பயங்கரவாதச் செயல்களுக்கு அல்லது தீவிரவாதச் செயல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு இருந்தால், அவை பற்றியும் அரச பாதுகாப்பு அமைச்சுக்கு உட்பட்ட அரச புலனாய்வு சேவை உள்ளிட்ட சட்ட நடைமுறைப்படுத்தல் நிறுவனங்களுக்குரிய சி.ஐ.டியினர் கடந்த 6 மாதங்களாக ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வுகளுக்கமைய அது குறித்து முறையான ஆதாரங்களை தாக்கல்செய்தபிறகு, ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அந்த தனிநபர்கள் அல்லது அமைப்புகள் பட்டியலிடப்படவோ, நீக்கப்படவோ நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், கடந்த வருடங்களில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் ஒரு வருட காலத்துக்குள் உரிய அதிகாரியிடம் விண்ணப்பத்தின் மூலம் நீக்குவதற்கான கோரிக்கையை முன்வைக்க வாய்ப்பு உள்ளது. அது எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதோடு, அதனை உறுதிப்படுத்தும் வகையில் காரணங்கள் முன்வைக்கப்பட வேண்டும். பின்னர் பட்டியலிலிருந்து அந்த நபர் அல்லது அமைப்பு நீக்கப்பட வேண்டுமா என்பது குறித்து வெளியுறவு அமைச்சருக்குப் பரிந்துரைகளை முன்வைக்கும் கடமை, பொறுப்புவாய்ந்த அதிகாரிக்குரியது.

பின்னர், அரச பாதுகாப்புப் படையினரின் தகவல்களை முழுமையாக ஆய்வு செய்த பின்னர், உரிய அதிகாரியின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதன்பின்னர் குறித்த நபர் அல்லது அமைப்பு மீதான தடையை நீக்கலாமா வேண்டாமா என்பது குறித்து அமைச்சருக்கு பரிந்துரை வழங்கும் கடமை, பொறுப்பு வாய்ந்த அதிகாரியைச் சாரும்.

அமைச்சரின் முடிவே இறுதி முடிவு என்றும், பாதிக்கப்பட்ட தரப்பினர் அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகள் ஒவ்வொன்றின் இறுதி முடிவும், அடுத்த வரவிருக்கும் வர்த்தமானியில் (ஆண்டுதோறும் வெளியிடப்படும்) உரிய அதிகாரி, செயலாளர், பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்படும். அந்த நடைமுறைகள் அனைத்தும், ஐக்கிய நாடுகளின் சாசனத்தின்படி மேற்கொள்ளப்படுகின்றன - என்றுள்ளது.

## கெஹலியவின் வீட்டுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் முல்கம்பல, ஈரஸ்ஸகல மற்றும் விகார மாவத்தை ஆகிய பிரதேசங்களை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## மேர்வின் சில்வா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளின் பிரகாரமே இக்கைது இடம்பெற்றுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் பலம்மிக்க அமைச்சராக மேர்வின் சில்வா செயற்பட்டார். 2015 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயற்பட்டார்.

2015 பொதுத்தேர்தலில் போட்டியிட அவருக்கு இடமளிக்கப்படவில்லை. இதனால் கட்சி தாவும் அரசியலில் ஈடுபட்டு வந்தார். இறுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்தார்.

## பிளவடைகின்றது சஜித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

எதிரணியில் இருந்து வரும் உறுப்பினர்களையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள உறுப்பினர்களையும் இணைத்துக்கொண்டு பலமான அரசை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறுவவுள்ளார்.

அந்த அரசுக்கு சர்வகட்சி அரசு, சர்வகட்சி ஆட்சி, தேசிய அரசு ஆகிய மூன்று பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. எனவே, பலமிக்க அரசுக்கு இந்த மூன்று பெயர்களில் ஒரு பெயரை அதில் அங்கம் வகிக்கவுள்ள உறுப்பினர்களின் சம்மதத்துடன் ஜனாதிபதி சூட்டுவார்.

அனைத்துக்கட்சிகளையும் இணைத்துக்கொண்டு அசைக்க முடியாத அரசை நிறுவுவதே ஜனாதிபதியின் விருப்பம். இதற்காகப் பல கட்சிகளை அவர் தனித் தனியே சந்தித்தும் பேச்சு நடத்தியுள்ளார். எனினும், சில கட்சிகள் இழுத்தடிப்புக்களைச் செய்கின்றன. சர்வகட்சிகளை உள்ளடக்கிய தேசிய வேலைத்திட்டத்துக்குக்கூட சில கட்சிகள் நிபந்தனைகளை விதிக்கின்றன.

மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியால் சிக்குண்ட நாட்டை உடனடியாக மீட்டெடுக்க வேண்டும். இது கட்சி அரசியல் செய்யும் நேரமல்ல.

எனவே, காலத்தை வீண்விரயம் செய்யாமல் சேர விரும்பும் உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு பலமிக்க அரசை நிறுவி பொருளாதாரப் பிரச்சினை உள்ளிட்ட தேசிய பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வுகளைக் காணும் பயணத்தை ஜனாதிபதி உடனடியாக ஆரம்பிக்கவுள்ளார் - என்றார்.

## 50 இலட்சம் ரூபாவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அடையாளம் கண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் குறித்த சந்தேக நபர் நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்த போதிலும், சந்தேகநபர் அங்கு வருகை தந்திருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜா - எல பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் வங்கிக் கிளையொன்றிலுள்ள ரதிந்து சேனாரத்னவின் பிரத்தியேக சேமிப்புக் கணக்கில் இந்தப் பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது.

பணம் வைப்புச் செய்யப்பட்ட அதே நாளில், ரதிந்து சேனாரத்னவும் சம்பவம் குறித்து தனியார் வங்கியில் முறைப்பாடு செய்திருந்தார்.

பின்னர், அவர் தனது தனிப்பட்ட பேஸ்புக் பக்கத்தில் இட்டுள்ள பதிவில், தான் இவ்வாறான பொறிகளில் சிக்குவதில்லை எனவும், வர்த்தகம் மற்றும் கணக்கியல் தொடர்பில் தனக்கு கல்வித் தேர்ச்சி இருக்கின்றது எனவும் தெரிவித்திருந்தார்.

இதுவரை காலமும் போராட்டத்துக்காகத் தனது தனிப்பட்ட பணத்தைச் செலவு செய்து வரும் தன்னை இவ்வாறான பொறிகளின் ஊடாக சிக்கவைக்க முடியாது எனவும் ரதிந்து சேனாரத்ன மேலும் குறிப்பிட்டிருந்தார்.

## ரணிலுடன் பஸில் நேரில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது பேச்சு இது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வகட்சி அரசை ஸ்தாபிக்க முன்னெடுக்கும் செயற்பாடுகள், பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்தப் பேச்சின் போது அவதானம் செலுத்தப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் பஸில் ராஜபக்ஷ முன்வைத்த கோரிக்கை குறித்தும் இதன்போது பரிசீலனை செய்யப்படவுள்ளது எனவும் அறியமுடிந்தது.

## மாணிக்கக்கல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இன்று காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள், ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

## செல்வச்சந்நிதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், செப்டெம்பர் 9ஆம் காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

செப்டெம்பர் 10ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும், செப்டெம்பர் 11ஆம் திகதி பூக்காரர் பூஜையும் நடைபெறவுள்ளது.

விளம்பரங்களுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காத்திருக்கும் சட்டச் சுருக்குகள்

**‘சாட்சிக்காரனின் காலில் விழுவதிலும் பார்க்கச் சண்டைக்காரனின் காலில் விழுவது மேல்!’ – என்று முடிவு எடுத்துவிட்டார் போலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**புகலிடம் தேடி, தஞ்சம் கோரி, நாடுகள் தோறும் பல்லிளித்துக் கொண்டிருப்பதை விட, தன் நாட்டுக்குத் திரும்பி நெருக்கடியை எதிர்கொள்வது புத்திசாலித்தனமானது என்று தீர்மானித்திருப்பார் போலும்.**

**தஞ்சம் புகுந்த நாடுகளிலும் – மாலைதீவு, சிங்கப்பூர், தாய்லாந்து போன்றவற்றிலும் – பெருந்தொகைப் பணத்தைக் கொட்டிக் கொடுத்து ஆடம்பர ஹோட்டல்களில் தங்கினாலும், ஹோட்டல் அறையை விட்டு வெளியே வர முடியாத சிறைவாசம்தான். இந்த ஐந்து வார கால அஞ்ஞாத வாசம், மூடிய அறைக்குள் மனைவியுடன் தனித்திருந்து, இதுவரை காலமும் நடந்து முடிந்தவற்றை – கடந்து போன விடயங்களை – உருப்போட்டுச் சிந்திக்க வாய்ப்பளித்திருக்கும். யதார்த்தப் புற நிலைவரங்களை – கள நிலைமைகளை – மறு மதிப்பீடு செய்து, தமது தவறுகளை, தாம் முன்னெடுத்த எதேச்சாதிகார நடவடிக்கைகளின் எதிர்விளைவுகளை – அவர் சிந்தித்துத் தெளிவு பெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.**

**நாட்டிற்கு அவர் திரும்பி வருவதற்கு அவருக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது என்று கருதத் தேவையில்லை. அவர் ஜனாதிபதிப் பதவியை விட்டு விலகியமையோடு அரசியல் நிலைமைகள் – களச் சூழல்கள் – எவ்வளவோ மாறிவிட்டன. நிலைமை சீரடைந்து விட்டது.**

**மீண்டும் வந்து அரசியலில் நேரடியாக அவர் ஈடுபடாத வரை அவரது உயிருக்கு இங்கு பேராபத்து உண்டு என்று கருதுவதற்கு இடமில்லை.**

**முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன போல அவரும் இங்கு வாழ முடியும்.**

**தமக்குச் சரிப்பட்டே வராத அரசியலுக்குத் திரும்பாமல், இலங்கைப் பிரஜையாக அவர் இங்கு இருப்பதில் பெருஞ்சிக்கல் ஏதும் இருக்காது.**

**ஆனால், பிரச்சினைகள் வேறு வடிவங்களில் உண்டு. பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் ஜனாதிபதியாகவும் இருந்த போது அவர் செய்த அல்லது செய்யாமல் விட்ட தவறுகளுக்குப் பொறுப்பு கூற வேண்டிய கடப்பாடு அவருக்காக வலை விரித்து இங்கு காத்திருக்கின்றது என்பது நிச்சயம்.**

**ஏற்கனவே நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என்று இடைக்காலத் தடை உத்தரவு மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ போன்ற அவரது முன்னாள் ஆட்சி பீடத்தின் சகாக்களுக்கு எதிராக உண்டு. அவர் நாட்டுக்கு வந்திறங்கிய கையோடு, அது அவருக்கும் விஸ்தரிக்கப்படும் என்பது எதிர்பார்க்கப்படுவதே.**

**அவர் ஜனாதிபதியாக இருந்த காரணத்தினால் அவருக்கு எதிராக இதுவரை நிறுத்தப்பட்டிருந்த முன்னைய சட்ட நடவடிக்கைகள், வழக்குகள் மற்றும் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவர் ஆற்றிய தவறுகளுக்கான சட்டச் சுருக்குகள் எல்லாம் விரைந்து வந்து அவரைச் சூளும்.**

**உயிர்ப் பாதுகாப்புப் பிரச்சினையைச் சமாளித்தாலும், சட்ட நெருக்குவார இக்கட்டில் இருந்து அவர் பிழைப்பது ரொம்பக் கஷ்டமாக இருக்கும்.**

**அவரது மனைவி இன்னமும் அமெரிக்கப் பிரஜாவுரிமை வைத்திருக்கின்றார். அதனால் அவருக்கும் (கோட்டாபயவுக்கும்) அமெரிக்கப் பச்சை அட்டை அனுமதியாவது மீளக் கிடைக்கும். இலங்கையில் வந்து சில காலம் தங்கியிருந்தபடி அந்தப் பச்சை அட்டை அனுமதியைப் பெற்று, அதன் மூலம் அமெரிக்கா சென்று மகனுடன் வதியலாம் என அவர் திட்டமிடக் கூடும்.**

**ஆனால் நாட்டில் அவர் கால் பதித்தாராயின், அதற்குப் பின்னர் மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் செல்வதற்குக் கூட அவர் நீதிமன்றத்தின் சிறப்பு அனுமதியைப் பெற வேண்டி நேரும். ஏனெனில் அத்துணை தூரம் சட்டச்சுருக்குகள் அவருக்காக இங்கு காத்திருக்கின்றன. அதை அவர் கவனத்தில் கொள்வது நல்லது.**

# உண்மைக்குப் புறம்பான செய்திகள் ஊடகங்களில் வெளியிடப்படுகின்றன!

## மத்திய வங்கி ஆதங்கம்

மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவால் ’பணவீக்கம் என்பது பிரச்சனையொன்றல்ல: ஆனால் அது தீர்வொன்றாகும்.’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக சில இணைய ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தெளிவுபடுத்தி மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மத்திய வங்கியின் ஆளுநரால் வெளியிடப்பட்ட அறிக்கைகளைத் தொடர்புபடுத்தி பல்வேறு இணையத்தளங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் தவறான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க மூலம் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்ற அறிக்கையொன்றின் சிங்கள மொழி பெயர்ப்பு இணையத்தளங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியிடப்பட்டு வருகின்றது.

’பணவீக்கம் என்பது பிரச்சினையொன்றல்ல, ஆனால் தீர்வொன்றாகும். இந்தப் பொருளாதார நெருக்கடி எங்களுக்கேற்பட்ட சிறந்த விடயமொன்றாகவிருக்கலாம் – மத்திய வங்கியின் ஆளுநர் கூறுகின்றார்’ என்ற தலைப்பின் கீழ் அல்லது இதேபோன்ற தலைப்புகளின் கீழ் அண்மையில் சமூக வலைத்தளங்களில் பரந்தளவில் செய்திகள் வெளியிடப்படுகின்றமை பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

கலாநிதி நந்தலால் வீரசிங்கவின் பெயரில் வேறு தனிப்பட்ட நபர்களால் எழுதப்பட்ட ‘பணவீக்கம் என்பது பிரச்சினையொன்றல்ல, ஆனால் தீர்வொன்றாகும்’ என்ற தலைப்பிலான செய்திகளுக்கு அல்லது அதன் உள்ளடக்கங்களுக்கு அவரோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பல்ல என்பது பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. – என்றுள்ளது.

# சட்டவிரோதமாகப் பெற்றோல் கடத்த முற்பட்ட ஒருவர் கைது



அனுமதி பத்திரமின்றி சட்டவிரோதமாக பெற்றோலைக் கொண்டு செல்ல முற்பட்ட ஒருவர் பொலிஸ் குற்றவியல் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் – மதுரங்குளி பகுதியிலிருந்து முல்லைத்தீவு – கோகிலாறு பகுதிக்கு சந்தேகநபர் பெற்றோலைக் கெப்ரக வாகனத்தில் கொண்டு செல்ல முயற்சித்துள்ளார்.

இதன்போது புத்தளம் பொலிஸ் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் புத்தளம் – கொழும்பு பிரதான வீதியின் தில்லையடி பகுதியில் வைத்து இந்த வண்டியை மடக்கிப்பிடித்துள்ளனர்.

அனுமதி பத்திரமின்றி கெப்ரக வாகனத்தில் பெற்றோலைக் கொண்டு செல்வதாக பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய புத்தளம் குற்றவியல் விசாரணை பிரிவினருக்குத் தகவலை வழங்கியதாக புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 2 பரல்களில் 400 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டதாகவும் கெப் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பெற்றோலை இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாகக் கொண்டு வந்திருக்கலாமென பொலிஸ் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் சந்தேகிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக புத்தளம் பொலிஸ் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் தாமரைக் கோபுரத்தை திறக்க முடிவு!

கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தாமரை கோபுரத்தை அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் திறந்து வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வர்த்தக நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் முதலீட்டு வாய்ப்புகளுக்காக இந்த 300 மீற்றர் உயர கோபுரத்தைத் திறக்க கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

தாமரைக் கோபுரத்தில் அலுவலக வசதிகள், காட்சியறைகள், மாநாட்டு அரங்குகள் மற்றும் பிரத்தியேகமான வர்த்தக நிலையங்களைப் பெற முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறே அதில், சர்வதேச அளவிலான நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சிகளை ஏற்பாடு செய்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் விரைவில் மீள ஆரம்பிக்க நடவடிக்கை!

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் விரைவில் மீள ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

இது தொடர்பில் தீர்மானிப்பதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை அனைத்து உப வேந்தர்களும் அழைக்கப்பட்டுள்ளனர் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மருத்துவ மற்றும் இணை சுகாதார பீடங்களின் செயற்பாடுகள் தற்போதும் இடம்பெறுகின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.

ஏனைய பீடங்களை சேர்ந்த சில மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலேயே தங்கியிருந்தும், மேலும் சிலர் வீடுகளுக்குச் சென்றும் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# ரஷ்யாவின் கூட்டு போர் பயிற்சியில் இந்திய, சீனப் படைகள் பங்கேற்பு?

## இந்த மாத இறுதியில் நடக்கின்றது

பீஜிங், ஓக.18

ரஷியாவில் வருகிற 30 ஆம் திகதி தொடங்கி அடுத்த மாதம் (செப்டம்பர்) 5 ஆம் திகதி வரை 'வோஸ்டாக்-2022' என்கிற பெயரில் பத்துக்கும் மேற்பட்ட நாடுகளின் இராணுவம் பங்கேற்கும் கூட்டு போர்ப் பயிற்சி நடக்கவுள்ளது. இந்த கூட்டுப் போர் பயிற்சியில் இந்தியா மற்றும் சீன இராணுவங்கள் பங்கேற்கவுள்ளன என சீனா தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சீன இராணுவ அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

சீன மற்றும் ரஷ்ய இராணுவங்களுக்கு இடையிலான வருடாந்திர ஒத்துழைப்புத் திட்டம் மற்றும் இருதரப்பு ஒருமித்த கருத்துப்படி, சீன இராணுவம் தனது சில துருப்புகளை போர்ப் பயிற்சியில் பங்கேற்பதற்காக ரஷ்யாவுக்கு அனுப்பவுள்ளது. இந்தியா, பெலாரஸ், தஜிகிஸ்தான், மங்கோலியா மற்றும் பிற நாடுகளும் இந்தப் பயிற்சியில் பங்கேற்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

எனினும் ரஷ்யாவில் நடைபெறும் கூட்டுப் போர்ப் பயிற்சியில் இந்திய இராணுவம் பங்கேற்பது குறித்துஈந்திய மத்திய அரசு அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் தன் படைகளை இறக்க சீனா திட்டம்?

இஸ்லாமாபாத்,ஓக.18

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் பல்லாயிரம் கோடி ரூபா முதலீடு செய்துள்ள சீனா அந்த இரு நாடுகளிலும் சிறப்புப் புறக்காவல் மையங்கள் அமைத்துத் தங்கள் இராணுவத்தைக் குவிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. அண்டை நாடான பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் பி.ஆர்.ஐ. எனப்படும் 'பெல்ட் அண்டு ரோடு இனிஷியேட்டிவ்' (பட்டிமற்றும்பாதைஅபிவிருத்தித்திட்டம்) என்றதிட்டம்வாயிலாக சாலைமற்றும்இதரகட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டத்தில் பல ஆயிரம் கோடி ரூபா பணத்தை சீனா முதலீடு செய்துள்ளது.

இந்நிலையில் மத்திய ஆசிய நாடுகளில் ஆதிக்கம் செலுத்த விரும்பும் சீனா அதற்கான வேலையைத் துவங்கி உள்ளது.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் சிறப்புப் புறக்காவல் மையங்களை அமைத்துத் தங்கள் நாட்டு ராணுவ வீரர்களை அங்கு குவிக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக பாக். பிரதமர் பொஸ் ஒரீப், வெளியுறவுத்துறை அமைச்சர் பிலாவல் புட்டோ, இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் குவாமர் ஜாவேத் பாஜ்வா ஆகியோரை பாகிஸ்தானுக்கான சீன தூதர் நாங் ராங் சமீபத்தில் சந்தித்து அழுத்தம் கொடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இரு நாடுகளிலும் சீனத் திட்டங்களின் பாதுகாப்பு, அதை நிறைவேற்றி வரும் சீனக் குடிமக்களின் பாதுகாப்புக்காக இந்த மையங்களை அமைக்க அனுமதிக்குமாறு சீனா வற்புறுத்தி வருவதாக கூறப்படுகிறது.

# காபூலில் மசூதியில் தொழுகை வேளை குண்டுவெடிப்பு: முப்பது பேர் வரை சாவு



காபூல், ஆப்கானிஸ்தானில் ஷியா, சன்னி பிரிவினர் இடையே அடிக்கடி மோதல் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள பிரசித்தி பெற்ற மசூதியில் நேற்று ஏராளமானோர் வழக்கமான தொழுகைக்கான குவிந்தனர். அப்போது மசூதிக்குள் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதில் முப்பதுக்கும் மேற்பட்டோர் உடல் சிதறிப் பலியாயினர். பலர் காயமடைந்தனர்.

தகவலறிந்த மீட்புப் படையினர் விரைந்து சென்று காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். குண்டு வெடிப்புக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது. இத்தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# அழிந்துபோன டாஸ்மேனியன் புலி இனத்தை மீண்டும் கொண்டுவர விஞ்ஞானிகள் முயற்சி!



மெல்போர்ன்,ஓக.18

ஸ்டெம் செல், ஜீன் எடிட்டிங் தொழில்நுட்பம் (மரபணுக் கட்டமைப்பு மாற்றம்) மூலம் டாஸ்மேனியன் புலி இனத்தை மீள உலகுக்குக் கொண்டு வர விஞ்ஞானிகள் முயற்சி செய்கின்றனர். ஆஸ்திரேலியாவின் 'டாஸ்மேனியன் புலி' உலகில் அழிந்து போன விலங்கினங்களில் ஒன்றாகும். இவை தைலசின் என்றும் அழைக்கப்படுகின்றன.

இந்த புலிகள் 1930 இல் வரை பூமியில் வாழ்ந்தன. அதன்பின்னர் வேட்டையாடுதல், ஒருவகையான நோய் காரணமாக இந்த வகை புலி இனங்கள் அழிந்தன. ஆஸ்திரேலியாவின் டாஸ்மேனியா மாகாணத்தில் உள்ள உயிரியியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வந்த உலகின் கடைசி டாஸ்மேனியன் புலி 1936 ஆம் ஆண்டில் இறந்தது. இந்த நிலையில், ஸ்டெம் செல், ஜீன் எடிட்டிங் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அழிந்து போன டாஸ்மேனியன் புலி இனத்தை மீண்டும் பூமிக்கு கொண்டு வரும் முயற்சியில் ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர். டாஸ்மேனியன் புலியை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறது. இந்த சமீபத்திய திட்டம் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மற்றும் அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை தலைமையிடமாக கொண்டு இயங்கும் ஆராய்ச்சி நிறுவனத்தின் கூட்டு முயற்சியில் வந்துள்ளது. இதுகுறித்து ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆண்ட்ரிவ் பாஸ்க் பேசும்போது, இதற்காக டாஸ்மேனியன் புலியை போன்ற ஜீன் அமைப்புடைய விலங்கின் ஸ்டெம் செல்லை பிரித்து எடுக்க இருக்கிறோம். பின்னர் ஜீன் எடிட்டிங் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும். இன்னும் 10 ஆண்டுகளில் டாஸ்மேனியன் புலியை மீண்டும் பார்க்க முடியும் என்று நம்புகிறோம் என்று தெரிவித்தார்.

# சிரியாவில் துருக்கி இராணுவத்தின் வான் தாக்குதலில் 11படையினர் பலி



டமசிரியாவின் வடக்கு பகுதியில் உள்ள கோபனே நகரில் துருக்கி இராணுவம் வான்தாக்குதல் நடத்தியது.

இதில் 11 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர் எனவும், பலர் படுகாயம் அடைந்தனர் எனவும் சிரிய இராணுவம் தெரிவித்துள்ளது ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் எல்லையில் உள்ள குர்து இன போராளிகளை துருக்கி அரசு பயங்கரவாதிகளாகக் கருதுகிறது. இதன் கார ணமாக குர்து இன போராளிகளைக் குறிவைத்து துருக்கிராணுவம் அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி வருகிறது. சிரியாவில் இதுபோன்ற தாக்குதல்களை தடுக்க குர்து இன போராளிகளின் கட்டுப்பாட்டில் இருக் கும் பகுதிகளில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசு படைகள் பாதுகாப்பு பணிகளுக்காக நிறுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் சிரியாவின் வடக்கு பகுதியில் உள்ள கோபனே நகரில் நேற்று முன்தினம் இரவு துருக்கி இரா னுவம் வான்தாக்குதல் நடத்தியது. இதில் சிரிய அரசுப் படைகளின்ராணுவ சோதனை சாவடி மீது குண்டுகள் வீசப்பட்டதில் 11ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர் என வும், பலர் படுகாயம் அடைந்ததனர் எனவும் சிரியா இராணுவம் தெரிவித்துள்ளது. எனினும் அதை மறுத் துள்ள துருக்கி இராணுவம், குர்து போராளிகள் துருக்கி பிராந்தியத்தில் நடத்திய தாக்குதலில் ஒரு ஈராணுவ வீரர் பலியானதாகவும், அதற்கு பதிலடியாக நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 13 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளது.

# உலகின் 60 வீதத் தடுப்பூசிகளை இந்தியாவேதான் வழங்குகின்றது



உலகளவில் பயன்படுத்தப்படுகிற தடுப்பூசிகளில் 60 சதவீதம் தடுப்பூசிகளை விநியோகிப்பது இந்தியாதான் என்று இந்திய மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பெருமிதத்துடன் கூறினார்.

## நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பெருமிதம்

மத்திய செலவினத்துறையின் கூடுதல் செயலாளர் சஜ்ஜன் சிங் யாதவ் 'இந்தியாவின் தடுப்பூசிகள் வளர்ச்சி கதை' என்ற புத்தகத்தை எழுதி உள்ளார். டெல்லியில் நேற்று இந்த புத்தகத்தை மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

உலகளவில் பயன்படுத்தப்படுகிற அனைத்து தடுப்பூசிகளில் 60 சதவீதம் தடுப்பூசிகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுபவை ஆகும். பல பத்தாண்டுகளில் உலகளவில் தடுப்பூசி விநியோகத்தில் இந்தியா சிறப்பான பங்களிப்பை தனி ஒரு நாடாக செய்துள்ளது. இந்தியாவில் தயாரிக்கப்படுகிற தடுப்பூசி, ஒட்டுமொத்த உலகுக்கும் விநியோகிக்கப்படுகிறது. இன்றைக்கு இந்தியா ஒவ்வொருவருக்கும் 2 டோஸ் தடுப்பூசியை செலுத்தி வருகிறது. கொரோனாவுக்கு எதிராக அந்த அளவுக்கு அதிகமாக தடுப்பூசிகளை தயாரிப்பதும், அவற்றை போடுவதும் எளிதான ஒன்று அல்ல. பொது முடக்க காலத்திலும்கூட கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசிகளை இந்தியா உற்பத்தி செய்தது. உலகளவில் நமது நாடு தடுப்பூசிக்குப் பங்களிப்புச் செய்ய முடியும் என்பது இந்தியாவின் மரபணுவில் உள்ளது. - இவ்வாறு அவர் கூறினார்.

இந்தியாவில் இதுவரை கொரோனாவுக்கு எதிராக 208 கோடியே 57 லட்சம் டோஸ் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

# ஆபாச உடை அணிந்தவரிடம் சீண்டல் சில்மிஷம் குற்றமாகாது

## முன் பிணை வழக்கில் நீதிபதி தீர்ப்பு




'கேரள எழுத்தாளர் மீதான பாலியல் பலாத்கார வழக்கில், குற்றஞ்சாட்டிய பெண் பாலியல் இச்சையை தூண்டும் விதமாக ஆடை அணிந்து இருந்ததால், சட்டப்பிரிவு 354ஏ குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு பொருந்தாது' எனக் கருத்து தெரிவித்த நீதிமன்றம், எழுத்தாளருக்கு முன்பிணை வழங்கி உத்தரவிட்டது.

கேரளாவில், மார்க்சிஸ்ட் கம்யூ.,வைச் சேர்ந்த முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் இடது ஜனநாயக முன்னணி ஆட்சி நடக்கிறது. இம்மாநிலத்தைச் சேர்ந்தவர், எழுத்தாளர் சிவிக் சந்திரன்(வயது 74). மாற்றுத்திறனாளியான இவர், கோழிக்கோடு மாவட்டம் கொயிலானி கடற்கரையில் வைத்து, 2020 பெப்ரவரியில் தனக்குப் பாலியல் தொல்லை கொடுத்தார் என இளம் பெண் எழுத்தாளர் பொலிஸில் முறைப்பாடு கொடுத்தார்.

இந்த வழக்கில் தனக்கு முன்பிணை அளிக்கக் கோரி எழுத்தாளர் சிவிக் சந்திரன், கோழிக்கோடு மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். அந்த மனுவுடன் முறைப்பாடு கொடுத்துள்ள பெண், தன் மடி மீது அமர்ந்திருக்கும் புகைப்படத்தையும் சிவிக் சந்திரன் இணைத்துள்ளார். இந்த வழக்கில் சிவிக் சந்திரனுக்கு சமீபத்தில் முன்பிணை வழங்கப்பட்டது.

அதற்கான உத்தரவு நகல் நேற்று வெளியானது. அதில் கூறப்பட்டதாவது:-

மனு மற்றும் இணைக்கப்பட்ட படங்களைப் பார்க்கும்போது, முறைப்பாடு தெரிவித்த பெண் தன் உடல் அங்கங்கள் தெரியும்படி ஆடை அணிந்துள்ளார். அந்த ஆடை, பாலியல் இச்சையைத் தூண்டும் வகையில் உள்ளது. இந்நிலையில், 74 வயதான மாற்றுத்திறனாளி நபர், முறைப்பாடு அளித்த பெண்ணை தன் மடியில் வலுக்கட்டாயமாக அமர வைத்து, பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் எனக் கூறுவதை நம்ப முடியவில்லை. எனவே, பாலியல் பலாத்கார வழக்குகளுக்கான சட்டப்பிரிவு 354ஏ, குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு பொருந்தாது. எனவே, மனுதாரருக்கு முன்பிணை வழங்கப்படுகிறது. - இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்புக்கு பல்வேறு தரப்பினர் ஆதரவாகவும், எதிராகவும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# நடிகர் ரஜினி கவர்னர் ஆகிறார்?



தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி – ரஜினி திடீர் சந்திப்பில் என்னதான் நடந்திருக்கும் என்ற கேள்விக்குறி எல்லோரது மனதிலும் எழுந்துள்ளது.

ரஜினியை பயன்படுத்திக் கொள்வதில் பாரதிய ஜனதா வட்டாரத்தில் ஆதரவு இருக்கிறது என்றும் கூறப்படுகின்றது.

நடிகர் ரஜினிகாந்த் சமீபத்தில் டெல்லி சென்று பிரதமர் மோடியை சந்தித்துப் பேசி விட்டு வந்த சூட்டோடு சூடாக தமிழக கவர்னர் ஆர்.என்.ரவியைச் சந்தித்துப் பேசியமை பலவிதமான யூகங்களை அரசியல் வட்டாரத்தில் ஏற்படுத்தி இருக்கிறது. கவர்னருடன் அரசியல் பேசினேன் என்று ரஜினி 'பளீர்' எனக் கூறியதும் விவாதமாகி இருக்கிறது.

உண்மையில் கவர்னர் ஆர்.என்.ரவி – ரஜினி சந்திப்பில் என்னதான் நடந்திருக்கும் என்ற கேள்விக்குறி எல்லோரது மனதிலும் எழுந்துள்ளது. கவர்னர் ஆர்.என்.ரவி ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் மேலிடத்துக்கு மிகவும் நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு தமிழகத்தில் பாரதிய ஜனதாவை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதில் பா.ஜ.க. மேலிட தலைவர்கள் மிக, மிக தீவிரமாகி இருக்கிறார்கள். அந்த இலக்கின் ஒரு பகுதிதான் கவர்னர் ரவி ரஜினி சந்திப்பு என்கிறார்கள். ரஜினியை பயன்படுத்திக் கொள்வதில் பாரதிய ஜனதா வட்டாரத்தில் ஆதரவும் இருக்கிறது. எதிர்ப்பும் இருக்கிறது.

பிரதமர் மோடி, ரஜினியை விரும்புகிறார் எனவும், உள்துறை மந்திரி அமித்ஷா விரும்பவில்லை எனவும் கூட தகவல்கள் வெளியாகி உள்ளன. ரஜினியை தங்கள் பக்கம் இழுத்து சில பொதுக்கூட்டங்களில் பேச வைத்தாலே போதும் என்று கூட நினைக்கிறார்களாம்.

இதற்காக ரஜினிக்கு என்ன வேண்டுமானாலும் செய்ய பா.ஜ.க. மூத்த தலைவர்கள் தயாராக இருக்கிறார்களாம். தற்போது சில மாநிலங்களில் கவர்னர் பதவி காலியாகவே உள்ளது. சிறிய மாநிலம் ஒன்றில் ரஜினியை கவர்னர் பதவியில் அமர வைக்கலாம் என்று கூட பேசப்பட்டதாக சமீபத்தில் ஒரு வார இதழில் தகவல் வெளியாகி இருந்தது. டெல்லி வட்டாரத்தில் இது உறுதி செய்யப்படுகிறது.

தமிழக அரசியலைப் பொருத்தவரை ரஜினிக்கு மிகப்பெரிய வாக்கு வங்கி இல்லை. ஆதரிக்கும் மன நிலையில் இருந்த நடுநிலை மக்களும் இப்போது ரஜினியைக் கண்டு கொள்வதில்லை. என்றாலும் ரஜினியை முன்நிறுத்தி ஏதோ ஒரு அலையை உருவாக்க பாரதிய ஜனதாவில் சில மூத்த தலைவர்கள் தீவிரமாக உள்ளனர்.

'ஆண்டவன் சொல்றான்... அருணாச்சலம் முடிக்கிறான்...!' – பொருத்தமாகத்தான் இருக்கிறது.

# பிரதமர் மோடியுடன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் டெல்லியில் சந்திப்பு



டெல்லி சென்றுள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி திரௌபதி முர்மு, துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் ஆகியோரை நேற்றுத் தனித் தனியாகச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து மாலையில் அவர் இந்தியப் பிரதமர் மோடியையும் சந்தித்துப் பேசினார்.

அப்போது, தமிழகத்தில் சர்வதேச செஸ் போட்டியை நடத்துவதற்கு அனுமதி தந்ததற்கும், போட்டியைத் தொடங்கி வைக்க நேரில் வந்தமைக்கும் நன்றி தெரிவித்தார். அதன் பிறகு தமிழ்நாட்டு நலன் சார்ந்த கோரிக்கைகள் அடங்கிய விரிவான மனு ஒன்றையும் அவர் பிரதமரிடம் அளித்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய 9,602 கோடி ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகையை விரைந்து தருமாறும் குறித்த சந்திப்பில் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார் செய்திகள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமின்றி தமிழகத்திற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கும் மசோதா மீது விரைந்து முடிவெடுத்து ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் பிரதமரிடம் கேட்டுக் கொண்டார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை,கலாசார பீடத்தில் முப்பெரும் திறப்புவிழா







(நூருள் ஹூதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்)

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை,கலாசார பீடத்தின் முப்பெரும் திறப்புவிழா நிகழ்வு நேற்று கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூவக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வின் முக்கிய அங்கமாக உலக வங்கியின் நிதிப்பங்களிப்புடன் வடிவமைக்கப்பட்ட புக்ஷிசிபும் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக கலை,கலாசார பீடத்தில் கட்டிமுடிக்கப்பட்ட மாணவர் செயற்பாட்டு மையம் உபவேந்தரினால் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தினூடாக தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடம் 12 கோடி ரூபா நிதி உதவியைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சகல வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள மாணவர் செயற்பாட்டு மையத்தில் இளம்கலை மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளமையுடன் தொழில் வழிகாட்டல் அலகு, சமூக நல்லிணக்க மையம், மாணவர் பிரத்தியேக நூலகம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக மாணவர் மையத்திற்காக சுமார் ஒன்றரைக் கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. கலை, கலாசார பீடத்தின் சகல கற்கைத்துறைகளுக்கும் தனியான நூலகத்தினை அமைப்பதற்கும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தினூடாக நிதியுதவி அளிக்கப்பட்டது. இதன்படி சுமார் இருபது லட்சம் ரூபா செலவில் கலை, கலாசார பீடத்தின் எட்டு. துறைகளிலும் பிரத்தியேக நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கான நூல்கள், தளபாடங்கள் போன்றனவும் திட்டத்தித்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நூலங்களும் உபவேந்தரினால் திறந்துவைக்கப்பட்டு குறித்த துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

மேலும்நிகழ்ச்சித்திட்டத்தினூடாகமாணவர்களின் ஆங்கில மொழியாற்றல், கணிணி அறிவு என்பவற்றினை மேம்படுத்துவதற்காக சுமார் ஒரு கோடி 86 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதில் விரிவுரை மண்டபங்களை டிஜிடல் மயப்படுத்துவதற்காக விரிவுரை மண்டபங்களில் ஸ்மார்ட்போட், எல்.ஈ.டீ. திரைகள் என்பனவும் பொருத்தப்பட்டு அவை நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. கலை, கலாசார பீடத்தின் இணைய வழி மூலமான கற்றல், கற்பித்தல் செயற் பாடுகளை மேம்படுத்துவதற்காக தனியான தரவுத் தளசேமிப்பகம்ஒன்றும்நிறுவப்பட்டுள்ளது.


கலை, கலாசார பீடத்தினால் வழங்கப்படுகின்ற பட்டப்பின்படிப்புக் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கான பட்டப்பின் படிப்பு கற்கை அலகும் உபவேந்தரினால் திறந்துவைக்கப்பட்டது. இவ்வலகினால் முதுமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி கற்கைகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் சுமார் ஒரு கோடி இருபது லட்சம் ரூபா நிதிப்பங்களிப்புடன் கலை, கலாசார பீடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளும் விருத்திசெய்யப்பட்டுள்ளன. இந்நிதியுதவியின் கீழ் நிறைவுசெய்யப்பட்ட திட்டங்களும் உபவேந்தரினால் திறந்து வைக்கப்பட்டு பீடாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இம்முப்பெரும் திறப்பு விழா நிகழ்வில் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் பொறியியலாளர் என். டீ. சிராஜுதீன், பதிவாளர் எச். அப்துல் சத்தார், பிரதிப்பதிவாளர் எம். ஐ.நௌபர், வர்த்தக முகாமைத் துவ பீடாதிபதி கலாநிதி ஏ. சபீனா எம்.ஜீ. ஹசன், தொழிநுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.மஜீத், துறைத்தலை வர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், பதில் நிதியாளர் வன்னியாராச்சி, சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட உதவிப் பதிவாளர்கள், பல்கலைக்கழக உலக வங்கி நிதித்திட் டங்களின் பொறுப்பாளர் பேராசிரியர் எம்.ஏ.எம். றமீஸ், பல்கலைக்கழக பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஷீல், சிரேஷ்ட உதவிப்பதிவாளர் எம்.டீ. ஏ. அஸ்ஹர், கலை கலாசார பீடத்தின் நிகழ்த்திட்ட ஒருங்கிணைப்பாளர் பௌசுல் கரீமா, மேற்படி செயற்றிட்டங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளர்கள், பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஒலுவில் துறைமுகத்தை மீள இயங்க வைத்த டக்ளஸிக்கு தென்கிழக்கு பல்கலை பாராட்டு





(பாறுக் ஷிஹான்)

மிக நீண்ட காலமாக செயல் இழந்து காணப்பட்ட ஒலுவில் துறைமுகத்தை மீண்டும் இயங்க வைத்து தந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தென்கிழக்கு பல்கலைக்கழகம் பாராட்டி வாழ்த்தி உள்ளது. தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் இதற்கான பாராட்டு மற்றும் வாழ்த்து செய்தியை சம்பிரதாயபூர்வமாக அமைச்சருக்கு அனுப்பி உள்ளார்.

இதில் இவர் குறிப்பிட்டு உள்ளவை வருமாறு:-

எமது நாடு பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்து உள்ள இக்கால கட்டத்தில் தாங்கள் கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டு இருக்கின்றமையை நான் வரவேற்று வாழ்த்துகின்றேன். நாட்டு நலனை முன்னிறுத்தி தாங்கள் மேற்கொள்ள உள்ள மகத்துவம் வய்ந்த அனைத்து வேலைதிட்டங்களுக்கும் முன்கூட்டியே எனது வாழ்த்துகளை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடை கின்றேன்.

அதே நேரம் கடந்த 05 வருடங்களுக்கும் மேலாக செயல் இழந்து காணப்பட்ட ஒலுவில் துறைமுகத்தை மீண்டும் செயற்பட வைத்து தருவதற்கு தாங்கள் மேற்கொண்டு இருக்கின்ற அனைத்து முயற்சிகளுக்காக வும் எமது பல்கலைக்கழக கல்வி சமூகத்தின் சார்பாகத் தங்களை பெரிதும் வாழ்த் துகின்றோம். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை உருவாக்கி தந்த முன்னோடி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் எம். எச். எம். அஷ்ரப்பின் நாமத்தை இத் துறைமுகத்துக்குத் தாங்கள் முன்னின்று சூட்டி வைத்தமைக்காகவும் எமது வாழ்த்துக்கள். இப்பிராந்தியத்தில் உள்ள உயர் கல்வி ஸ்தாபனம் என்கிற வகையில் தங்களுடைய அபிவிருத்தி சிந்தனைகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் வெற்றிக்கு எம்மால் முடிந்த அனைத்து விதமான ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்கு காத்திருக்கின்றோம்.

ஆகவே ஒலுவில் துறைமுகத்தை இன்னமும் அபிவிருத்தி செய்வதற்கு தங்களால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள நன்மை பயக்கின்ற அனைத்து முன்னெடுப்புகளுக்கும் எனது பூரண ஆதரவை வழங்குவதற்கு எப்போதும் தயாராகவே உள்ளேன். தாங்கள் கோருகின்ற பட்சத்தில் கடற்றொழில் துறை தொடர்பான எமது நிபுணத்துவங்களை தங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் ஆயத்தமாகவே உள்ளேன். - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஆண்டான்குளம் விவசாயிகளுக்கு தவிசாளரின் முயற்சியால் பசளை

(பைஸல் இஸ்மாயில்)

திருகோணமலை – புல்மோட்டை கமநல சேவை நிலையத்தில் ஆண்டாங்குள விவசாயிகளுக்கென களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பசளைகளை பிறிதொரு பிரதேசத்துக்கு வழங்க திட்டமிடப்பட்டிருந்த செயற்பாட்டை குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தலையிட்டு உடனடியாகத் தடுத்து நிறுத்தி, பசளைகளை ஆண்டாங்குள விவசாயிகளுக்கு வழங்கி வைத்தார்.

புல்மோட்டை கமநல சேவை நிலையத்தினால் இந்த விடயம் முன்னெடுக்கப்பட இருந்தமையை அறிந்துகொண்ட ஆண்டாங்குள விவசாயிகள் குறித்த விடயத்தை குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கமநலதிணைக்கள ஆணையாளரைத் தொடர்பு கொண்டு ஆண்டங்குள விவசாயிகளின் நிலமையைத் தெளிவுபடுத்திய பின்னர் மாவட்ட கமநல உதவி ஆணையாளரின் பணிப்புரைக்கமைவாக ஆண்டாங்குள விவசாயிகளுக்கு உரிய பசளைகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனை முன்னெடுத்த தவிசாளருக்கு ஆண்டாங்குள விவசாயிகள் நன்றிகளைத் தெரிவித்தனர்.

# கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் மண்ணெண்ணெய் பிரச்சினைக்கு தீர்வு!

## டக்ளஸ் திட்டவட்டம்



கடற்தொழிலாளர் எதிர்கொள்ளும் மண்ணெண்ணை பிரச்சினைக்கு இந்தவார இறுதியிலிருந்து தீர்வு கிடைக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கனவே பல்வேறு பாதிப்புக்களையும், பொருளாதாரத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், கடல்சார் உணவைப் பெற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு விலை அதிகரித்து காணப்படுவது தொடர்பில் அமைச்சரிடம் வினவப்பட்டது. அதற்குப் பதிலளித்த அமைச்சர் –

இந்தப் பிரச்சினை இருப்பது உண்மைதான். இந்த நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதால் எமது மக்கள் அதிகளவான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். அதற்குத் தீர்வு காணும் வகையில் எரிபொருளைத் தாராளமாக கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக கடற்றொழிலாளர்களைப் பொறுத்தவரையில், சிறு கடற்தொழிலாளர்களிற்கு மண்ணெண்ணெய் ஒரு தட்டுப்பாடாக இருக்கின்றது. சற்று முன்பும் கொழும்புடன் தொட்புகொண்டு தனியாரால் மண்ணெண்ணெய் இறக்கப்படுவது தொடர்பில் தற்போது உள்ள நிலை தொடர்பில் கலந்துரையாடியுள்ளேன்.

அதேவேளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் மசகு எண்ணெயை வடித்து மண்ணெணணெயாக விநியோகிப்பதற்கான நடவடிக்கையும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த வார இறுதியில் அது கைகூடும் என்று நம்புகின்றேன்–என்றார்

மத்திய அரசின் அமைச்சராக இருந்தாலும், நன்நீர் மீன்பிடியை அதகரிப்பதற்கான முயற்சி மத்திய அரசால் முன்னெடுக்கப்படுகின்றதா என அவரிடம் வினவியபோது –

நாடு தழுவிய ரீதியில் அந்தர் திட்டத்தைநாங்கள் கொண்டுவருகின்றோம். கிளிநொச்சி மாவட்டத்தில் முறிப்பு எனும் இடத்தில் 30 சிறு குளங்கள் உள்ளன. அதில் 5 குளங்களைப் புதுப்பித்திருக்கின்றோம்.

மேற்படி இடத்தை பார்க்கச் சென்று, அதனை எவ்வளவு விரைவில் இயக்க முடியும் என முயற்சிக்கின்றோம். அதேவேளை, ஏனைய குளங்கள், வாவிகள் என எல்லாவற்றிலும் நாங்கள் மீன்குஞ்சுகளையும், இறால் குஞ்சுகளையும் விடுவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

இந்திய சுதந்திர தின நிகழ்வில் கச்சதீவை மீட்போம் என்ற விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது . இது தொடர்பில் அவரிடம் வினவியபோது –

கச்சதீவு இலங்கைக்குரியது. அதே நேரத்தில், இந்திய படகுகள் எல்லை தாண்டி அத்துமீறி வந்து கடல் வளங்களை அழிப்பதிலும் எனக்கு இணக்கப்பாடு இல்லை என அவர் தெரிவித்தார்.

தேசிய தினத்தில் தமிழிலும் தேசிய கீதம் ஒலிக்க வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை. அதனை தொடர்ந்து பரவலாக இலங்கையில் பல இன, மத, மொழி உள்ள மக்கள் வாழ்வதால், பன்மைத்தன்மையை வெளிப்படுத்தும் வகையிலான கோரிக்கையைத்தான் அமைச்சரவையில் நான் முன்வைத்துள்ளேன். அதனை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது–என்றார்.

சீனக்கப்பல் தொடர்பில் அமைச்சர் கருத்து வெளியிடுகையில் –

அரசுகளுக்கிடையிலான கலந்துரையாடல் என்று போய்க்கொண்டிருக்கின்றது. சீனக்கப்பல் இங்கு வருவதால் இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் எழக்கூடிய பிரச்சினை என்னவென்று ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இதுவரை அவர்கள் சரியான கருத்து எதையும் சொல்லவில்லை என்று ஊடகங்கள் சொல்லுகின்றன. எது எவ்வாறானாலும், சுமுகமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் எனதுநிலைப்பாடுஎன அவர் இதன்போது தெரிவித்தார்.



## தன்னார்வ ஒத்துழைப்புதிட்ட உடன்படிக்கை இலங்கை – கனடா இடையில் கைச்சாத்து!

இலங்கையும் கனடாவும் தன்னார்வ ஒத்துழைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் உடன்படிக்கையை கைச்சாத்திட்டுள்ளன.

கொழும்பில் நேற்று (புதன்கிழமை) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினன் மற்றும் இலங்கையின் நிதி பொருளாதார துறை அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

## பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் முல்லையில் கைது



முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி ஒட்டுசுட்டான் சிவநகர் கிராமத்தில் யானை வேலிக்கு பொருத்தப்பட்டிருந்த சோலர் ஒன்றும், வீட்டில் இருந்த தண்ணீர் மோட்டர் ஒன்றும், வீட்டில் இருந்த சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டுள்ளன என மூன்று முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ள மையுடன், மாங்குளம் பொலிஸ் பிரிவின் கீழ் களவாடப்பட்ட இரண்டு தண்ணீர் மோட்டர்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், களவாடப்பட்ட சான்றுபொருள்களையும் சந்தேகநபர்களையும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. மயிலத்தமடு மேய்ச்சல் தரவையை ஆக்கிரமிப்பதற்கு எதிராகக் கவனவீர்ப்பு







மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான பல லட்சம் கால்நடைகளின் மேய்ச்சல் தரவையான மயிலத்தமடு பகுதி சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டு தமிழர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதைக் கண்டித்து நேற்றுக் காலை மட்டக்களப்பு செங்கலடி சந்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் பொதுமக்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

பௌத்த, சிங்கள அரச பயங்கரவாதத்தினால் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு பகுதிகள் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்பட்டு பௌத்த விகாரைகளும், சிங்களக் குடியேற்றங்களும் அமைக்கப்பட்டு வருகின்றமையைக் கண்டித்து இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.08.2022இல் வெளியிடப்பெற்றது.